**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.மு.ச.ஸ்ரீநாத்.,B.A.,B.L.,(Hons.) L.L.M.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள் செவ்வாய் கிழமை

**அசல் வழக்கு எண்.32/2026**

**CNR No.TNCB-1300049-2026**

A.அபுல் ஹசன் ... வாதி

/ எதிர் /

M.நபீலா பர்ஹீன் ... பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 28.01.2026 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 02.02.2026 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 25.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.இருதயராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**தீர்ப்புரை**

வாதிக்கும் பிரதிவாதிக்கும் கடந்த 02.02.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் K.V.R.நகர், மக்கா மஸ்ஜித் சுன்னத் வல் ஜமாஅத் பள்ளிவாசல் என்ற இடத்தில் நடைபெற்ற திருமணத்தை 03.09.2025 அன்று நோட்டரி வழக்குரைஞர் மூலம் சான்றொப்பமளித்து முபாரத் என்னும் நிக்காஹ் இரத்தினை விளம்புகை செய்து விவாகரத்து உத்தரவு வழங்கக் கோரியும், (b) தாவா செலவுத் தொகை கோரியும் (c) தாவா தன்மை கருதி வேறு உத்திரவு செய்ய வேண்டி இருப்பின் அதனை பிறப்பித்தும் தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII விதி 1ன்படி இவ்வழக்கு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வழக்குரையின் சுருக்கம் :</u>

(2.1) வாதிக்கும் பிரதிவாதிக்கும் முஸ்லிம் முறைப்படி பெற்றோர்கள் உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் கடந்த 02.02.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் K.V.R. நகர் மக்கா மஸ்ஜித் சுன்னத் வல் ஜமாஅத் பள்ளிவாசலில் வைத்து நிக்காஹ் நடைபெற்றது. திருமணத்திற்குப் பின்னிட்டு வாதி மற்றும் பிரதிவாதி வாதியின் மேற்படி விலாசத்தில் உள்ள முகவரியில் தனது இல்வாழ்க்கையை தொடங்கினார். திருமணமான மூன்று மாதங்களிலிருந்தே வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் அடிக்கடி சின்ன பிரச்சனைகளும், சச்சரவுகளும் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட ஆரம்பித்தது. இவ்வாறாக பல பிரச்சனைகள் வாதியையும் பிரதிவாதியையும் பலமுறை பிரித்து இருக்க செய்துவிட்டது. இதனால் கணவன் மனைவி என்ற பந்தம் இருவருக்கும் மனதளவில் கருத்து வேறுபாட்டை அதிகமாக உண்டாக்கியது.

(2.2) வாதி மற்றும் பிரதிவாதியின் உற்றார் உறவினர்கள் வாதி மற்றும் பிரதிவாதியை சேர்த்து வைக்க மேற்கொண்ட கடுமையான முயற்சிகள் பலனற்று போனது. அதன் காரணமாக சுமார் நான்கு மாங்களாக இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து தனித்தனியாக வசித்து வந்தனர். பலமுறை ஜமாத் பெரியோர்கள், உறவினர்கள் மற்றும் நலம் விரும்பிகள் முன்னிலையில் சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இருப்பினும், இருவரும் மீண்டும் சேர்ந்து குடும்ப வாழ்க்கை நடத்த இயலாது என்ற முடிவிற்கு வந்தனர். ஆகவே இனிமேல்கொண்டும் மனுதாரர் வாதி மற்றும் பிரதிவாதி மனதளவில் ஒன்றாக வாழ நினைக்காத காரணத்தினால், கடந்த 03.09.2025 அன்று இஸ்லாமிய

வழக்கப்படி முபாரத் என்னும் சமரச நிக்காஹ் இரத்து நடைபெற்றது. மேலும் நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் முபாரத் என்னும் நிக்காஹ் இரத்து பத்திரம் சான்றளிப்பு செய்யப்பட்டது. மேலும் முபாரத் என்னும் நிக்காஹ் இரத்து செய்யப்பட்டதை மாண்புமிகு நீதிமன்றத்தில் விளம்புகை செய்து விவாகரத்து பெற்றிட வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

### 3) <u>பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

(3.1) வாதியின் தாவா பொய், சட்டப்படியும் நியாயப்படியும் நிலை நிற்க தக்கது அல்ல. மேற்படி தாவாவானது திருமணமுறிவை விளம்புகை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே 02.02.2025 அன்று திருமணம் மேற்படி கூறியவாறு நடைபெற்று 07.04.2026 அன்று பதிவு செய்யப்பட்டது என்று பிரதிவாதி தெரிவிக்கிறார். மேற்படி திருமணம் நடந்து மூன்று மாதங்களிலிருந்தே வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும், ஆகவே இனிமேல்கொண்டும் மனுதாரர் வாதி மற்றும் பிரதிவாதி மனதளவில் ஒன்றாக வாழ நினைக்காத காரணத்தினால், கடந்த 03.09.2025 அன்று இஸ்லாமிய வழக்கப்படி முபாரத் என்னும் சமரச நிக்காஹ் இரத்து நடைபெற்றது. மேலும் நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் முபாரத் என்னும் நிக்காஹ் இரத்து பத்திரம் சான்றளிப்பு செய்யப்பட்டது.

(3.2) மேற்படி சங்கதிகள் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டபோதும், இந்நீதிமன்றத்திற்கு வழக்கின் முடிவைத் தீர்மானிக்க அதிகார வரம்பு இல்லை என்றும் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்திற்குத்தான் அதிகார வரம்பு உள்ளது என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும்

பிரதிவாதி தெரிவிக்கிறார்.

**4) <u>வழக்கெழுவினாக்கள் :</u>**

வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையில் கண்ட விவரங்களின் அடிப்படையில் இரு தரப்பும் கேட்கப்பட்டு, இவ்வழக்கின் தீர்விற்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **1.** | Whether the plaintiff is entitled to declaration of Mubarat as prayed for? |
| **2.** | To what other relief? |

**5) <u>சாட்சிகள் :</u>**

வாதி தரப்பில், வாதி **வா.சா.1** ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) <u>வாதங்கள்</u>**

(6.1) வாதிகள் தரப்பில் வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு வாதியின் வழக்குரையை ஒத்து சாட்சியம் அளித்திருப்பதாலும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் கொண்டு வாதி தரப்பு வழக்கு நிரூபித்திருப்பதாலும் வாதிக்கு அவர் கோரியவாறு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதென வாதிடப்பட்டது.

(6.2) பிரதிவாதி தரப்பில் வழக்குப்படி தீர்ப்பாக ஆட்சேபணை இல்லை என சமர்ப்பிக்கப்பட்டது.

**7) <u>எழுவினா 1–ற்கான தீர்வு:</u>**

(7.1) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வா.சா.ஆ.1 திருமண பதிவு பத்திரத்தை பரிசீலிக்கும்போது வாதி மற்றும் பிரதிவாதிக்கிடையிலான 02.02.2025 தேதியில் நடைபெற்ற திருமணம் நிரூபணமாகிறது. வாதி தரப்பில் முபாரத் அடிப்படையில் மண முறிவை விளம்புகை செய்யுமாறு பரிகாரம் கோரப்பட்டுள்ளது. அதற்கு பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. மேற்படி முபாரத்தை நிரூபிக்கும்விதமாக 03.09.2025 தேதியிட்ட முபாரத் பத்திரம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையிலும் மேற்படி முபாரத் ஒப்புக் கொள்ளப்பட்டு விவாகரத்து விளம்புகை செய்ய ஆட்சேபணை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(7.2) முபாரத், இஸ்லாமிய சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட ஒரு மணமுறிவு வழி என்பதால் முபாரத் ஏற்படுத்தப்பட்ட தேதியில் வாதி பிரதிவாதிக்கிடையிலான திருமண உறவு முடிவுக்கு வந்ததென இந்நீதிமன்றம் காண்கிறது. பிரதிவாதி தரப்பில் இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு பரிகாரம் வழங்க அதிகார வரம்பு இல்லை என கட்சி செய்யப்பட்டுள்ளபோதும் இஸ்லாமிய முறைப்படி முபாரத் என ஏற்பட்ட விவாகரத்தை விளம்புகை செய்யவே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் இவ்வழக்கு பரிகாரம் ரூ.5,000/–ற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாலும் இந்நீதிமன்றத்திற்கு வழக்குப் பரிகாரம் வழங்க அதிகார வரம்பு உள்ளதென இந்நீதிமன்றம் காண்கிறது. அதனால் வாதி கோரியவாறு விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதென இந்நீதிமன்றம் காண்கிறது. இந்த எழுவினா வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

8) <u>எழுவினா 2–ற்கான தீர்வு</u>

எழுவினாக்கள் 1–ற்கு கண்ட தீர்வின்படி மேற்கொண்டு வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து மேற்கண்ட எழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், வாதிக்கும் பிரதிவாதிக்கும் கடந்த 02.02.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் K.V.R.நகர், மக்கா மஸ்ஜித் சுன்னத் வல் ஜமாஅத் பள்ளிவாசல் என்ற இடத்தில் நடைபெற்ற திருமணம் 03.09.2025 அன்று நோட்டரி வழக்குரைஞர் மூலம் சான்றொப்பமளித்து முபாரத் என்னும் நிக்காஹ் இரத்து ஏற்பட்டுவிட்டது என விளம்புகை செய்து வழக்கு அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்ததை, என்னால் பிழை நீக்கம் செய்து 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 30ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SREENATH M S

Digitally signed by SREENATH M S
Date: 2026.06.30 17:16:12 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

<u>வாதி தரப்பு சாட்சி</u> :

வா.சா.1. A.அபுல் ஹசன்

<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்</u> :

| ஆவண எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1/ வா.சா.1 | 02.02.2025 | திருமண பதிவு பத்திரம் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2/ வா.சா.1 | 03.09.2025 | முபாரத் பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.3/ வா.சா.1 | – | வாதியின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி</u>**

பி.வா.சா.1 – M.நபீலா பர்ஹீன்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1/ பி.வா.சா.1 | | பிரதிவாதியின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் |

SREENATH M S

Digitally signed by SREENATH M S
Date: 2026.06.30 17:16:18 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

-------------------------------

**<u>அசல் / வரைவு தீர்ப்புரை</u>**

அ.வ.எண்.32/2026

நாள் : 30.06.2026

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி

-------------------------------